பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 07 சனிக்கிழமை 20.04.2024 கதிர் 164

## அன்னை பூபதிக்கு தாயகத்தில் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி



இந்தியாவுக்குஎதிராக பட்டினிப் போராட்டம் நடத்தி உயிர்த் தியாகம் செய்தஅன்னைபூபதியின் நினைவு தினம் நேற்று தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. யாழ்ப் பாணத்தில், நல்லூரில் அமைந்துள்ளதிலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாகபிரதானநிகழ்வு இடம்பெற்றது.

அது தவிர குடா நாட்டின் பல இடங் களிலும் ☞2

## ரூ. 1,700 சம்பள உயர்வு கேட்டு இ.தொ.கா. நேற்று போராட்டம்

### கோட்டையில் திரண்டனர் தொழிலாளர்கள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குமாறு வலியுறுத்தி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இ.தொ.காவின் தேசிய அமைப்பாளர் சக்திவேல் தலைமையில் இந்தப் போராட்டம் ஏற்பாடும் செய்யப்பட்டதுடன், ☞2

## ஈஸ்டர் தாக்குதலில் இறந்தோருக்கு நாளை காலையில் மௌன அஞ்சலி

### பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அழைப்பு

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கிணங்க நாளை காலை 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கொழும்பு உயர்மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைஅனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அன்றைய தினம் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ☞2

## இது ரகசியம் அல்ல!

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான போர்ப் பதற்றம் அதிகரித்திருக்கின்றது. தொடர்ந்து தன்னோடு சொறிந்துகொண்டிருந்தஇஸ்ரேலுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை 300 ட்ரோன்கள், பலஸ்டிக் மற்றும் குரூஸ்ஏவுகணைகளைக்கொண்டு தாக்குதல் நடத்தியது ஈரான். அவற்றில் 99 சதவீதமானவை அமெரிக்கப் போர்க் கப்பலின் ஆதரவுடன் வழியிலேயே மறித்து அழிக்கப்பட்டுவிட்டன என்று அமெரிக்க அறிவித்திருந்தாலும் பதிலடி தப்பாது என்று இஸ்ரேல் கொந்தளித்துக்கொண்டிருந்தது.

இருந்தாலும் இஸ்ரேலைப் பொறுமை காக்கும்படி அதன் மேற்குலக நண்பர்களான அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தியிருந்தன. ஆனால், இந்த விடயத்தில் இஸ்ரேல் சொந்தமாகத்தான் முடிவெடுக்கும் என்று அதன் பிரதமர் நெத்தன்யாகு தெரிவித்திருந்தார். இருந்தாலும் இஸ்ரேல் உடனடிப் பதில் தாக்குதல்களை நடத்தவில்லை. நாட்டின் பாதுகாப்புத் ☞2

## சஜித் கட்சி அமைப்பாளர் ஐ.தே.கவில் இணைந்தார்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள்சக்திகட்சியின்பெலியத்ததொகுதி அமைப்பாளர் டாக்டர் பிரவீன் ருவிந்த அதபத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரானபாராளுமன்றஉறுப்பினர் வஜிர அபேவர்தனவிடமிருந்து கட்சியின்அங்கத்துவத்தையும்பெற்றுக் கொண்டுள்ளார்.

பிடகோட்டேயில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவுக்கு நேற்றைய தினம் வருகை தந்துள்ள பிரவீன் ருவிந்த அத்தபத்து ஐ. தே. க. தவிசாளரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதுடன் அதனையடுத்து கட்சியின்அங்கத்துவத்தையும்பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன் சுமுகமான கலந்துரையாடலுக்குப் பின் தமது முழுமையான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

### வசந்த முதலிகே கடும் சாடல்

# மோடிக்குப் பொருத்தமான ஒரு பொம்மையே ரணில்

### கச்சதீவைத் திருப்பித் தரமாட்டார்கள் என நம்ப முடியாது என்றும் தெரிவிப்பு

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குப் பொருத்தமான ஒரு பொம்மையே இலங்கையின் ஜனாதிபதியாக இருக்கிறது என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில்நேற்றுசெய்தியாளர் களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**இந்தியப் பிரதமர் நரேந்திர** ☞2

## நிதித்துறையின் ஸ்திரத்தன்மைக்கு உலக நிதிக் கூட்டுத்தாபனம் ஆதரவு

இலங்கை நிதித் துறையின் ஸ்திரத் தன்மைக்கு ஆதரவளிப்பதாக உலக வங்கி குழுமத்தின் தனியார் துறை பிரிவான உலக நிதிக்கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய துணை தலைவர் ரிக்கார்டோ புலிட்டி உறுதியளித்துள்ளார்.

வொஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கியின் வசந்த கால கூட்டத்தின் போது, இராஜாங்கநிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோரை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடாபில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் முதலீடுகளைமேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. தனியார் துறையின் ஈடுபாடு இலங்கையின் வளர்ச்சியை உயர்த்துவதற்கும் நெகிழ்ச்சியான எதிர்காலத்திற்கு வழி வகுப்பதற்கும் முக்கியமானது.

அத்துடன், இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் சிறந்த பரிமாற்றமாக அமைந்தது. அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு நிதி வசதி வழங்கும் ☞2

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து

## முக்கியமற்ற கேள்விகளே என்னிடம் கேட்கப்பட்டன

### அருட்தந்தை சிறில் காமினி தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் எந்த வகையிலும் முக்கியத்துவமற்றகேள்விகளேகுற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரால்தன்னிடம் கேட்கப்பட்டன என்று அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு நேற்றைதினம் அழைக்கப்பட்டுவிசாரிக் கப்பட்ட பின்னர் அவர் இதனைத்தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டோருக்குநீதி கிடைக்கவில்லைஎன்பது தொடர்பில்கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் மிகக் கடுமையான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருபவர் அருட்தந்தை சிறில் காமினி. அதனாலேயே அவர் விசாரணைக்கும் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக தற்போதுள்ள ஆர்வம் பொலிஸாருக்கு ஐந்து ஆண்டுகளுக்குமுன்னர் இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே ஏற்பட்டிந்தால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்பட்டிருக்காது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அது தொடர்பிலான ஆர்வம் இல்லையென்று நான் கூறவில்லை. மாறாக, குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு விசாரணைநடத்துவதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் சம்பவம் தொடர்பில் எவ்விதமான அடிப்படையிலும் முக்கியத்துவமற்ற கேள்விகளே என்னிடத்தில் கேட்கப்பட்டன. இதுவரையில் வெளிப்படுத் ☞2

## ஆசிய தங்கம் எதிர்வீரசிங்கம் 89ஆவது வயதில் மறைந்தார்



இலங்கையின் முன்னாள் மெய்வல் லுநர் ஜாம்பவான்நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் நேற்று தனது 89ஆவதுவயதில் அமெரிக்காவில் ☞2

## மின் கட்டணத்தைக் குறைப்பதே புதிய மின்சார சட்டத்தின் நோக்கம்

மின் கட்டணத்தை குறைப்பதே புதிய மின்சாரசட்டமூலத்தின் நோக்கம் ஆகவே புதிய மின்சாரசட்டமூலத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றத்தை நாட முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரதெரிவித்தார்.

அதுதொடர்பில் ☞2

## புதிய மின்சாரச் சட்டமூலத்திற்கு மின் பொறியியலாளர்கள் எதிர்ப்பு

### முறையான ஆய்வின்றி தயாரிப்பு என குற்றச்சாட்டு

முறையான ஆய்வுகள் மற்றும் விழிப்புணர்வின்றி புதியமின்சாரசட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அச்சங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தது.

அச்சங்கம் மேலும் தெரிவத்துள் ☞2

## கடன் மறுசீரமைப்பு பணிக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவு

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் இணைத் தலைவர் என்ற வகையில்,இலங்கையின் கடன்மறுசீரமைப்புக்கு ஜப்பான் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் புஃஜி டய்லோ தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் ☞2

## இனி இது .....

தொடர்பான அமைச்சரவைக் கூட்டத்தைப் பல தடவைகள் கூட்டி ஆராய்ந்ததன் பின்னர் வெள்ளிக்கிழமை ஈரான் மீது இஸ்ரேல் பதில் தாக்குதலை நடத்தியிருக்கிறது.

ஈரானின் முக்கிய நகரமான இஸ்ஃபாகான் மீது இஸ்ரேலிய 'மினி ட்ரோன்கள்' தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகளைமேற்கோள்காட்டிஏபிசி செய்தி நிறுவனம் நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது. இஸ்ஃபாகான் நகரில் குண்டுகள் வெடித்ததாக ஈரானின் உள்ளூர் ஊடகங்களும் அறிவித்தன. எனினும் இஸ்ரேலின் தாக்குதலை ஒரு பெரிய விடயமாக அன்றி புறக்கணிக்கத்தக்கதாகவே ஈரான் காட்டிக்கொள்கிறது. தமது நகரத்தின் மீது நடத்தப்பட்ட 'மினி ட்ரோன்' தாக்குதல் மிகச் சிறிய அளவிலானது, அதனால் எந்தச் சேதங்களும் ஏற்படவில்லை என்று ஈரான் அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இருப்பினும் ஈரானுக்கான சர்வதேச விமானங்கள் எல்லாம் இஸ்ரேலின் தாக்குதல் அச்சம் காரணமாகத் தமது பாதைகளைத் திசை திருப்பி இருந்தன.

தமது தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்தால் தமது பதிலடி பயங்கரமானதாக இருக்கும் என்று ஈரான் முன்னதாக அறிவித்திருந்தாலும், தற்போதைய இஸ்ரேலியப் பதிலடிக்குப் பதிலடி கொடுக்கும் அளவில் தாம் இல்லை என்கிற வகையிலேயே ஈரான் தற்போது காட்டிக்கொள்கின்றது. இஸ்ரேலால் இலக்கு வைக்கப்பட்ட இஸ்ஃபாகான் நகரத்தில் ஈரானின் இராணுவத் தளங்கள் மற்றும் அதன் ஆராய்ச்சி மையம் என்பன இருக்கின்றன. அந்த நகரத்திற்கு அருகி-லுள்ள இடத்தில் ஈரானிய அணு உலை ஒன்றும் உள்ளது. ஈரானின் அணு உலைகளை இஸ்ரேல் குறிவைக்கப்பார்க்கின்றது என்று ஐ.நா. ஏற்கனவே எச்சரித்திருந்த நிலையில் இஸ்ஃபாகான் நகரம் இலக்கு வைக்கப்பட்டிருப்பது பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

மத்திய கிழக்கில் நடக்கும் இந்தப் போரால் எமக்கென்ன வந்தது, அங்கு போர் தொடர்ந்து நடந்துவரும் சங்கதி தானே என்கிறீர்களா?

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் போர் நடந்தால் இலங்கைக்கு பொருளாதார ரீதியாக பெரும் அடி விழும். ஏனெனில் ஈரானுடன் தேயிலைக்கு எரிபொருள் என்ற ரீதியில் நீண்ட காலமாகவே வர்த்தகம் செய்து வருகின்றது இலங்கை. இங்கிருந்து பெருமளவில் தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடுகளில் -முதன்மையானது ஈரான் போர் தொடங்கினால் இது பாதிக்கப்படுவதுடன் சர்வதேசச் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலையும் அதிகரிக்கும். அதனால் இங்கும் பொருள்களின் விலைகள் மறுபடியும் எகிறத் தொடங்கும். தேர்தல் வேறு வரவுள்ள நிலையில் மத்திய கிழக்கில் மற்றொரு பெரும் போர் தொடங்கிவிடுமோ என்கிற பதற்றத்தில் இருக்கின்றது கொழும்பு. அப்படியொரு போர் தொடங்கினால் மற்றொரு பெரும் அழுத்தத்தை எதிர்கொள்ள வேண்டி வருமே என்று இப்போதே தலையில் கைவைத்துக்கொண்டிருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மோடிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோடிக்குப் பொருந்தும் ஒரு பொம்மையே இலங்கையில் ஜனாதிபதியாக இருக்கிறார். அந்த பொம்மை மோடி கூறிய அனைத்து விடயங்களையும் செய்துள்ளது. எனவே, இந்தியாவின் கோரிக்கைக்கு ஏற்ப கச்சதீவினை வழங்க மாட்டார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மோடிக்குத் தேவையான வகையில் ரணில் என்ற பொம்மை செயற்படுவதால் கச்சதீவு தொடர்பில் பெரும் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

உலகில் மூன்று இடங்களில் போர் நிலமைகள் உருவாகியுள்ள நிலையில், கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமென்று கோசங்கள் எழுந்துள்ளன. ஆகவே ஆளும்தரப்பு இந்தக்கோசங்களின் பின்னணியை விளங்கிக் கொள்ளவேண்டும்.

நாட்டுமக்களின் சொத்துக்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கு ஆளும்தரப்புத் தீர்மானிக்குமாயின் அதற்கு இடமளிக்க முடியாது என்றே நாம் கூறுகின்றோம் என்றார்.

## ரூ. 1,700 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களும், இ.தொ.காவின் ஆதரவாளர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்குமாறு அரசாங்கம் கம்பனிகளிடம் கோரிக்கை விடுத்துடன், அமைச்சரவையிலும் இதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

என்றாலும், கம்பனிகள் 1700 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென தொடர்ச்சியாக கூறிவருவதுடன், அரசாங்கத்தின் தீர்மானத்தையும் ஏற்க மறுத்து வருகின்றன.

இதுதொடர்பில் தொழில் அமைச்சு, முதலாளிமார்சம்மேளனம் மற்றும் இ.தொ.காவிற்கும் இடையில் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுகளும் தோல்வியிலேயே முடிந்தன.

இதன் காரணமாகவே கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இன்று கொழும்பில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை இ.தொ.கா முன்னெடுத்துள்ளது.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை புறக்கணிக்காதீர், சம்பள விடயத்தில் இழுத்தடிப்பு வேண்டாம், அராஜக கம்பனிகளே தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளத்தை கொடு இல்லாவிட்டால் தோட்டங்களை விட்டு வெளியேறு போன்ற பல்வேறு சுலோகங்களை காட்சிப்படுத்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாவது:

புதிய மின்சாரச் சட்டமூலத்தில் விலைநிர்ணயம் சம்பந்தமான சிக்கல்கள் உள்ளன. இதுகால வரையிலான நடைமுறையில் குறைந்தவிலையில் மின்சாரத்தினை உற்பத்தி செய்வதே நம்நாட்டில் நடைமுறையில் இருந்த விடயமாகவுள்ளது.

ஆனால் புதிய சட்டமூலத்தில் பொருளாதாரச் செலவு என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அந்த வார்த்தை உள்வாங்கப்பட்டிருப்பதால் மின்சாரக் கட்டணத்தினை பொருளாதாரச் செலவு அதிகரிக்கின்றது எனக் காரணம் கூறி எந்த நேரத்திலும் விலையை அதிகரிக்க முடியும்.

அதேநேரம் சட்டமூலத்தில் 12 நிறுவனங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. குறித்த நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்யவோ அல்லது மாற்றவேண்டுமெனவோ கருதினால் அமைச்சரவையின் அனுமதிக்கு அப்பால் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படாது விற்பனை செய்வதற்கான நிலைமைகளும் உள்ளன என்றார்.

## ஆசிய தங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலமானார். அவர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றார்.

உயரம் பாய்தல் வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் 1952 மற்றும் 1956ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்கேற்ற பெருமையை பெற்றுள்ளார்.

1958ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் உயரம் பாய்தலில் 1.95 மீற்றர் உயரத்துக்கு ஆற்றலை வெளிப்படுத்தி புதிய சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

இதன் மூலம் சர்வதேச மெய்வன்மைப் போட்டி அரங்கில் இலங்கைக்கு தங்கப்பதக்கம் ஈட்டிக் கொடுத்த முதல் வீரர் என்ற வரலாற்று சிறப்பும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கத்துக்கு உள்ளது.

1962ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடை பெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் பெரியவிளானில் 1933 ஒகஸ்ட் 24ஆம் திகதி பிறந்த இவர் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

பாடசாலை பருவத்திலேயே உயரம் பாய்தலில் இலங்கை சாதனையை முறியடித்த பெருமையும் அவருக்கு உள்ளது.

இலங்கை, சியேரா லியோன், பப்புவா நியூ கினியா, நைஜீரியா ஆகிய நாடுகளில் பல்கலைக்கழக விரிவுரையாளராகபணியாற்றியுள்ள நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் யுனெஸ்கோவிலும் 5 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார்.

## அன்னை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாளை மாவட்டங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட இடங்களில் அன்னைபூபதியின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தியும் நினைவுரைகளை ஆற்றியும் நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் அரசுக் கட்சி ஆகியவற்றின் ஏற்பாட்டில் தனித்தனியாக நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலும் அன்னை பூபதி நினைவு தினம் மாணவர்களால் எழுச்சியுடன் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

அன்னையின் நினைவு தினத்தையொட்டி முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவரது திரு உருவப்படம் தாங்கிய ஊர்திப் பவணி மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பகுதியை வியாழக்கிழமை மாலை வந்தடைந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் இருந்து தொடங்கப்பட்ட இந்த ஊர்திப் பவனி வடக்கு கிழக்கு தாயகப் பகுதகிள் எங்கும் பயணித்த பின்னர் அன்னையின் நினைவிடம் அமைந்துள்ள களுவாஞ்சிக்குடியை வந்தடைந்தது.

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயத்திற்கு முன்பாக 1988 மார்ச் 19 தனது பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி 1988 ஏப்ரல் 19 தன் உயிரை ஈழத் தமிழ் மக்களுக்காகத் தியாகம் செய்தார்.

## நிதித்துறையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில், மூன்று தனியார் வங்கிகளின் ஊடாக இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நாணய பரிமாற்ற வசதியை வழங்க சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு உறுதியளித்தது என்றார்.

இதேவேளை, இலங்கையின் வளர்ச்சி மற்றும் பின்னடைவிற்கான தனியார் துறை ஈடுபாட்டின் முக்கியத்துவம் பற்றிய தெளிவுபடுத்தலுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதன்போது நன்றி தெரிவித்துள்ளார்.

## முக்கியமற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்படாத விடயங்களை கூறுவதற்கு நான் தயாராகவே இருந்தேன். அதேபோன்று ஜனாதிபதிக்கு நாம் அனுப்பிய கடிதத்தினையும் அவர்களிடத்தில் கையளித்தேன். அந்தக்கடிதத்துக்கு எந்தவிதமான பதில்களும் அளிக்கப்படவில்லை என்பதையும் நாம் வெளிப்படுத்தினோம்.

விசாரணை செய்ய வேண்டிய பல விடயங்கள் அதில் காணப்படுவதால் அவற்றை விசாரணை செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியை அதனூடாக அறிந்து கொள்ள முடியும் என்றார்.

## மின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளதாவது,

மின்கட்டத்தைக் குறைப்பதற்காக இரண்டு வழிமுறைகள் காணப்பட வேண்டும். முதலாவதாக, மின்சார உற்பத்திச் செலவினை குறைக்க வே;ணடும். இரண்டாவதான நிர்வாகச் செலவைக் குறைப்பதனையே தற்போது மேற்கொள்ளவுள்ளோம்.

அதன் முதலாவது வழிமுறையான மின்னுற்பத்தி செலவைக் குறைப்பதற்கு, எரிபொருளில் இயங்கும் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு பதிலாக மீள்புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்களை எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ளது

120 ரூபா செலவாகும் என்றபோதும், போக்குவரத்துக்கான டீசல் மின் உற்பத்திக் கட்டமைப்புக்களை விடவும் உயர் வாக காணப்பட்டமையும் நிலைமைகளை மோசமாகியுள்ளது என்றார்.

## கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிநிதி அமைச்சர் புஃஜி டய்லோவுக்கும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித் தாவது:

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான நட்புறவை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு இலங்கை அடைந்துள்ள சிறந்த பொருளாதார முன்னேற்றத்தை பாராட்டுகின்றோம்.

கடன் மறுசீரமைப்பு முன்னேற்றம் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவில் நிறைவுசெய்ய ஜப்பானின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் உள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# பெண்கைதிகளுக்கு சீர்திருத்த சிகிச்சை திட்டம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்





இன்றையமாறிவரும்உலகில்அதிகமானகுற்றச்செயயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர். இத்தகைய குற்றவாளிகளைப் புனர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற மிக முக்கியமான

பணியை யாழ்ப்பாணச் சிறைச்சாலை வழங்குகின்றது.

இங்கே சுமார் எழுநூறிற்கும் அதிகமான கைதிகள் புனர்வாழ்வளிக்கப் படுகின்றனர். பல்வேறு குற்றங்கள் புரிந்த கைதிகள் இருந்த போதும் அதிகளவான கைதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட்டவர்கள்



ஆவர். ஆண் கைதிகள் மட்டுமன்றி பெண் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள கைதிகளைப் புனர்வாழ்வளித்து குறிப்பாகப் பெண் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை கடந்த 13 ஆம்; திகதி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இது பெண்களுக்கான தையற் பயிற்சிநெறி ஆகும். இந் நிகழ்வையாழ்ப்பாணம்சிறைச்சாலைஒழுங்குபடுத்தியிருந்தது. இந் நிகழ்வின் பிரதம அதீதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவி ராஜம் தெய்வேந்திரம் அம்மணி நிகழ்வினை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நிகழ்விற்குயாழ்ப்பாணநீதிவான்ஆனந்தராசாசிறைச்சாலை அட்தியட்சகர் இந்திரகுமார், நைற்றா முகாமையாளர் திருமுருகன், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதம அதீதியாகக் கலந்து நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்த ராஜம் தெய்வேந்திரம் அம்மணி உரையாற்றுகையில் –

குற்றம் செய்தவர்கள் வாழ்நாள் முழுவதும் குற்றவாளிகள் அல்லா். சந்தர்ப்ப சூழ்நிலையால் குற்றம்; நிகழ்கின்றது. இந்தக் குற்றங்களிலிருந்து நீங்கள் எவ்வாறு வெளிவர வேண்டும். மீண்டும் இத்தகைய குற்றங்கள்

இடம்பெறாது இருப்பதற்கு உங்களை எவ்வாறு தயார் செய்ய வேண்டும். நீங்கள் உங்களுக்கான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் பயணிக்க வேண்டும். அதற்காகவே இச் சிறிய முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. நீங்கள் அனைவரும் இதனை ஓர்

அத்திபாரமாகக் கொண்டு உங்களுக்கான தொழிலை அடையாளம்கண்டுசமூகத்தோடுஇணைந்துநற்பிரஜையாக வாழவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நீதஜவான் ஆனந்தராஜா உரையாற்றுகையில் –

நீங்கள் நற்பிரஷ்ஜயாக சீர்திருத்தப்பட்டு சமூகத்தோடு உங்களை இணைக்கின்ற நோக்கத்தோடு உங்களை நான் சிறைப்படுத்தினேன். சிறைக்கு உள்ளே இவ்வாறான திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தியமை உண்மையில் ஒரு வரப்பிரசாதம் ஆகும். இதை நீங்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

இந்தத்திட்டத்தைஇங்குஅறிமுகப்படுத்தியஜஎம்எச்ஓமற்றும் ரத்;னம்; பவுண்டேசன் ஆகியோருக்கு பாராட்டுக்களையும் வணக்கத்தையும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் உரையாற்றுகையில் –

இத்தகைய திட்டம் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம்செய்ததையிட்டுதான்பெருமையடைவதாகவும் இத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ராஜம் தெய்வேந்திரம் அவர்களிற்குவணக்கத்தையும்நன்றியையும்தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் இத் திட்டம் வெற்றியடைவதற்குறிய முழு ஒத்துழைப்புக்களையும்தான்வழங்குவதாகவும்குறிப்பிட்டார். இந் நிகழ்வில் கலந்துகொண்ட

பெண் கைதிகள் ராஜம் தெய்வேந்திரம் அம்மணிக்கு தமது நன்றியைத் தெரிவித்ததோடு தமது மனக் குறைகளையும் கஸ்டங்களையும் தெரிவித்தனர். (05)

# மாகாண உலமாக்கள் ஆலிம்களுக்கு இடையிலான கிறிக்கற் சுற்றுப் போட்டி




(எம்.ஏ.றமீஸ்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட உலமாக்கள்மற்றும்ஆலிம்களுக்கிடையிலானகிறிக்கற் சுற்றுப் போட்டி சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. அணிக்கு 9 பேர்




கொண்ட மட்டுப் படுத்தப்பட்ட 5 ஓவர்கள் கொண்டதாக இச்சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

வருடத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை நடத்தப்பட்டு வரும் இக்கிறிக்கற் சுற்றுப் போட்டியினை இம்முறைசம்மாந்துறைறெளழாவிளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்திருந்தது. நாபீர் பவுண்டேஷனின் பூரண அனுசரணையில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியின் போது தெரிவு செய்யப்பட்ட 14 விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றியிருந்தன.

றெளழா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆர்.எம்.றஸ்லான்தலைமையில்நடைபெற்றஇக்கிறிக்கற் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வின்போது நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு சம்மாந்துறை றெளழா விளையாட்டுக் கழகம் மற்றும் பாலமுனை மகாசினி விளையாட்டுக் கழகம் ஆகியன தெரிவு செய்யப்பட்டன. இறுதிப் போட்டியின்போது முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை றெளழா விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 3 விக்கற்றுக்களை இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. 26 வெற்றி இலக்கிலை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாலமுனை மகாசினி விளையாட்டுக்கழகம் 5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கற்றுக்களை இழந்து 23 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இதன் மூலம் 02 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சம்மாந்துறை றெளழா விளையாட்டுக்கழகம் இச்சுற்றுப்போட்டியின்வெற்றிக்கிண்ணத்தினைப் சுவீகரித்துக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக றெளழா விளையாட்டுக் கழகத்தின் எம்.அஸ்மிர் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றிக் கிண்ணங்களை இச்சுற்றுப் போட்டிக்கு பூரண அனுசரணை வழங்கிய நாபீர் பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமான்கண்டு நாபீர் வழங்கி வைத்தார். இதேவேளை, நாபீர் பௌண்டேஷனின் ஸ்தாபக் தலைவரும் பொறியியலாளருமான உதுமான் கண்டு நாபீரின் கடந்த கால சேவையினைப் பாராட்டி சுற்றுப் போட்டியின் ஏற்பாட்டுக் குழுவினரால் நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வருடாந்த கணக்கறிக்கைகளை பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடு

## கல்முனை மாநகர சபையின் முன்மாதிரி



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கானஇறுதிகணக்கறிக்கைகள் மாநகரசபையின்புதியகணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வினால் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியிடம் புதன்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கல்முனை மாநகரசபையின்வருடாந்தஇறுதிக் கணக்கறிக்கைகள் தயாரிப்பதில் தொடர்ந்தேச்சியாக நிலவி வந்த குறைபாடுகள் காரணமாக அவை முறையாகநிறைவுசெய்யப்படாமல் இருந்து வந்தன.

இந்நிலையில் மாநகர சபையின் பதில் கணக்காளராக நியமிக்கப்பட்டவை. ஹபீபுல்லாஹ், கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதியன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்ற கையோடு மாநகர ஆணையாளரின்ஆலோசனையின் பேரில் மேற்கொண்ட துரித நடவடிக்கைகள் காரணமாக இறுதிக் கணக்குகள் தயாரிப்பதில் நிலவி வந்த குறைபாடுகள் யாவும் நிவர்த்தி செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் குறுகியகாலத்தினுள் மேற்படி 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்கறிக் கைகள் தயாரிக்கப்பட் டுள்ளன.

கடந்த காலங் களில் இறுதிக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படாமை காரணமாக ஏற்பட்டிருந்த சிக்கல் களைஉடனடியாகநிவர்த்திசெய்யும் வகையில் மிகக் குறுகிய காலத் தினுள் நிதிப் பிரிவு அலுவலர்களின் ஒத்துழைப்புடன் இவை தயாரிக்கப் பட்டிருப்பதாக கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ் தெரிவித்தார்.

இவற்றைப் பார்வையிடவும் இவை தொடர்பான விளக்கங்கள் பெறுவதற்கும் கல்முனை மாநகர வாழ் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது.

இவற்றை விரைவாக தயாரிப்ப தற்கு ஆலோசனைகளை வழங்கிய மாநகர ஆணையாளருக்கும் ஒத்து ழைப்பு வழங்கிய அலுவலர்களுக் கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கேட்கும் சம்பள உயர்வு அவசியம்

**தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பள உயர்வு வழங்குமாறு கேட்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தின் முன்பாக ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. ஆளும் தரப்பின் பங்காளியாக இருந்தபோதும், சம்பள உயர்வு தொடர்பான பேச்சுக்களுக்கு முதலாளிமார் சம்மேளனம் வர மறுத்தமையைக் கண்டித்து இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.**

**இ.தொ.காவின் தேசிய அமைப்பார் சக்திவேல் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சம்பள உயர்வுப் பேச்சை முதலாளிமார் சம்மேளம் புறக்கணித்தைக் கண்டித்தே இந்தப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதாக சக்திவேல் தெரிவித்திருந்தார். ஆளும் தரப்பில் இருக்கும் இ.தொ.கா. தொழிலாளர்களுக்குச் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு உத்தரவிடாமல் போராட்டம் என்கிற நாடகத்தை ஆடுகின்றது என்று என்னதான் விமர்சனங்கள் இருந்தாலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை எல்லோருமே ஏற்றுக்கொள்கின்றார்கள்.**

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்பினரில் முதன்மையானவர்கள் பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களே. மற்றைய இடங்களில் நாளாந்தக் கூலித் தொழிலுக்கு நாளொன்றுக்கு ரூபாய் 2,5--00 அறவிடப்படுகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டும் மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்படுவது எந்த வகையிலும் நியாயமானது அல்ல. அதிலும் அவர்கள் நாளொன்றுக்கு 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பையே கேட்கிறார்கள்.**

**தமது நாளாந்த வருமானத்தை வைத்து குடும்பத்தின் தேவைகளை தோட்டத் தொழிலாளர்கள் நிறைவேற்ற முடியாதிருக்கையில் அவர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டிய நியாயத்தை சட்டமாக்கவேண்டிய ஆளும் தரப்பே ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் செய்துதான்சம்பளஅதிகரிப்பைப்பெறவேண்டியிருக்கிறது என்பது பேரபத்தமான ஒரு நிலை. அதனாலேயே எதிர்க்கட்சிகள் இந்தப் போராட்டங்களைக் கடுமையாக விமர்சிக்கின்றன.**

**"இதுவொரு கூட்டு நாடகம்" என்றும் "ஏற்கனவே தோட்ட நிறுவனங்களுடன் இ.தொ.கா. உடன்பாடு எட்டிவிட்டது. அடுத்த சில வாரங்களில் 1--00 அல்லது 200 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும். அதுகூடத் தங்களது போராட்டத்தின் பயனாகத்தான் கிட்டியது என்று காட்டத்தான் இப்படி நாடகமாடுகிறார்கள்" என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அப்படி நூறோ இருநூறோ சம்பள அதிகரிப்பு போதுமானதல்ல. தற்போதைய விலைவாசி உயர்வுக்கு ஏற்ப தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டியது அவசியம். அவர்கள் குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும்.**

**இந்தச் சம்பளப் பிரச்சினை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது. இதனை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை ஆளும் தரப்பு ஏற்படுத்தவேண்டும். தோட்டத்தொழிலாளர்கள்சார்பிலான அரசியல்கட்சிகள் எப்போதும் ஆளும் தரப்பில் அங்கம் வகித்துவரும் நிலையிலும் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காகப் போராட்டம் நடத்தவேண்டியிருப்பது பேரவலம். இனிவரும் காலங்களிலாவது அந்த நிலை மாறவேண்டும்.**


**மலையக அரசியல் கட்சிகள் மட்டுமன்றி தமிழ் பேசும் கட்சிகள் அனைத்தும் சேர்ந்தே தோட்டத் தொழிலாளர்களின்சம்பளஉயர்வைப்பெற்றுக்கொடுப்பதும் மிக முக்கியமானது. சம்பள உயர்வை விரைந்து பெற்றுக்கொடுக்க தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவதும் அவசியம்.**

# வாசிப்பை நேசிப்போம்

**வி.பி. கலைராஜன்**

இன்றைய இளம் தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகிறது. அவர்கள் நாள் முழுதும் கைப்பேசி, கணினி, இணையம், சமூக ஊடகம் இவற்றிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள்.

வளர்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தங்கள் கல்வி முறையை வகுத்துக்கொண்டு அப்படி கல்வி கற்றார்கள் என்றால் பாராட்டலாம். ஆனால், நிலைமை நேர்மாறாக இருக்கிறது.




மாணவச் செல்வங்கள் கைப்பேசியிலும் இணையத்திலும் பார்ப்பதற்கும் அவர்கள் கற்கும் கல்விக்கும் சிறிதும் தொடர்பு இருப்பதில்லை. பெற்றோர் அவர்களை அதட்டிக் கேட்டாலும் அன்போடு கேட்டாலும் ஏமாற்றி விடுகிறார்கள்.

வாசிப்புப் பழக்கம் மாணவர்களிடையே மிகவும் குறைந்து வருவது கவலை அளிப்பதாக உள்ளது. இருந்தாலும், இந்த ஆண்டு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் நடந்த புத்தகக் காட்சியில் ரூ.16 கோடிக்கு புத்தகங்கள் விற்பனையாகி உள்ளதாகக் கூறுகின்றனர். எப்படியோ பலரும் புத்தகங்களை வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பது சற்று ஆறுதல் தருகிறது.


புத்தகங்களை வாசித்தவர்கள்தான் வரலாற்றில் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்கள் வரலாற்றில் காணாமல் போய் விடுகிறார்கள். உலகில் சிறந்த ஆளுமையாக விளங்கியவர்கள், விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு குருதி சிந்தியவர்கள் ஆகியோரின் வரலாற்றை நாம் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும். வாசிப்பது கட்டாயமாகும். அப்போதுதான் அன்றைய தியாகசீலர்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடியும்.

படித்தவர்கள் பதவிக்கு வரவேண்டும் என்றால், படித்தவர்கள்தான் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு புத்தகங்களைப் படிக்க வேண்டும். காந்தியடிகளின் சுயசரிதையைக் கற்க வேண்டும். பணக்கார குடும்பத்தில் பிறந்து நாட்டுக்காக பல ஆண்டுகள் சிறைவாசம் இருந்த ஜவாஹர்லால் நேரு எழுதிய 'உலக சரித்திரம்' படிக்க வேண்டும்.

பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்ட வால்டேர் மற்றும் ரூசோ பல புத்தகங்களை வாசித்து கட்டுரைகளை எழுதியதால்தான் அவர்களின் எழுத்து பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்டது. 17 ஆண்டுகள் குடும்பம் தாங்கொணா இன்னலைச் சந்தித்தபோதும் பிறந்த பிள்ளை ஒவ்வொன்றாய் பசிக்குப் இரையானபோதும் காரல் மார்க்ஸ், தனது நண்பர் ஏங்கெல்ஸ் உதவியால் லண்டன் நூலகத்தில் தொடர்ந்து வாசித்தார். அப்போது தாதாபாய் நௌரோஜியும் அதே நூலகத்தில் வாசித்துள்ளார். இருவருக்கும் அறிமுகமில்லை. அப்படி தொடர் வாசிப்பால்தான் கம்யூனிஸ்ட் அறிக்கையையும், புகழ்பெற்ற மூலதனம் மூன்று பாகங்களையும் தொழிலாளர் வர்க்கத்துக்கு மார்க்ஸ் தந்தார். அவரது வாசிப்பு உலகத்தையே புரட்டிப் போட்டது.

மார்க்ஸ் எழுதியதைப் படித்து சோவியத் நாட்டை உருவாக்கிய லெனின், மார்க்ஸ் படித்த லண்டன் நூலகத்துக்கு சென்று படித்தார். அதேபோல் மார்க்ஸ் படித்த சுவிட்சர்லாந்து நூலகத்துக்கும் சென்று படித்தார். படிப்பு, படிப்பு என்று படித்துக் கொண்டே இருந்த லெனின், உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்போது தனது மனைவி குரூப்ஸ்காயாவிடம் கூறி ஒரு கிழவன் - ஓநாய் இடையே நடைபெறும் உயிருக்கான போராட்டத்தை படிக்கச் சொல்லி கண் மூடினார். கடைசி நிமிஷத்திலும் படிக்கச் சொல்லிக் கேட்டவர் லெனின்.

நாடாளுமன்றத்தில் பகத் சிங் குண்டு வீசினார் என்ற வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அப்போது அவருக்கு 23 வயது. வாழ ஆசை இல்லை, ஒரே ஆசை இந்திய விடுதலை. அவரிடம் சென்று நண்பர் விடிந்தால் தூக்கு இப்போது படிப்பா என்று கேட்கிறார். உடனே பகத் சிங் ஒரு புரட்சியாளரை பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறி லெனினும் புரட்சியும் என்ற புத்தகத்தை வாசிக்கிறார். தூக்கு தண்டனை விதிக்கும்போது என்னை தூக்கில் இடாதீர்கள். சுட்டுத்தள்ளுங்கள். அப்படி ஒருவேளை தூக்கிலிட்டால் என் கால்கள் இந்திய பூமித்தாயின் உடலில் என் பாதம் படும்படி செய்யுங்கள் என்று கேட்டவர் பகத் சிங்.



கியூபா விடுதலைக்கு போரிட்ட பிடல் காஸ்ட்ரோ, புரட்சியாளர் சே குவேரா துணையுடன் சர்வாதிகாரி பாடிஸ்டாவின் ஆட்சியை விரட்டியடித்தார்; ஆட்சி அமைந்தவுடன் கல்வியை மக்களுக்கு தாருங்கள் என்று பிடல் காஸ்ட்ரோவிடம் சே குவேரா கேட்டார். போர்க் களத்தில் இருந்த போதும் ஒரு கையில்துப்பாக்கியும் ஒரு கையில் புத்தகத்தையும் வைத்து படித்துக் கொண்டே இருப்பாராம் சேகுவேரா. பொலிவியா விடுதலைக்கு போராடச் சென்று பிடிபட்டு சுட்டுக் கொல்லப்பட்டார் சே குவேரா.

பிடல் காஸ்ட்ரோ வான்கடே சிறை முற்றுகை போரில் தோற்றபின் சிறையில் அடைக்கப்படுகிறார். அங்கு அவர் சிறையில் ஒரு நூலகமே உருவாக்கி கைதிகளைப் படிக்க வைக்கிறார். நிறைய படிப்பவர். நீதிமன்றத்தில் உலக சரித்திர சம்பவங்களைக் கூறி 'வரலாறு என்னை விடுதலை செய்யும்'


தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# வாசிப்பை நேசிப்போம்

4ம் பக்க தொடர்ச்சி...........

என்று கூறியவர் பிடல் காஸ்ட்ரோ.

அதேபோன்றுகிழக்கில்உதித்தசூரியன்என்று போற்றப்பட்டவர் சீனாவை செஞ்சீனாவாக்கிய மாசே துங். ஒரு வருடம் 1 லட்சம் மக்களுடன் பயணத்தை தொடர்ந்து அங்கிருந்து 11 மாகாணங்களைக் கடந்து புரட்சி ஏற்பட வழி வகுத்தவர். ஏராளமாக படிப்பதை பழக்கமாக கொண்டவர். கவிதை அதிகம் எழுதியவர். படிப்பது மட்டுமே எந்த ஒரு புரட்சிக்கும் வழிவகுக்கும் என்றவர். அவரின் பயணத்தின் முடிவில் மிஞ்சியவர்கள் 10,000 பேர்தான் என்று கூறப்படுவதுண்டு. இவ்வளவு பணிக்கும் போராட்டத்துக்கும் மத்தியில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதிக நூல்களைப் படித்தார். வாசிக்கும் பழக்கமே அவரை உச்சத்தில் உட்கார வைத்தது.



சுவாமி விவேகானந்தர் வாழ்வில் நாற்பது வயதைக்கூட தொடவில்லை. சிறந்த ஒழுக்கசீலர். அவர் அமெரிக்கா சென்று சிகாகோ மாநாட்டில் பேசும் வாய்ப்பை பெற்றவர். கற்றோரும், அறிஞர்களும், சிந்தனையாளர்களும் நிறைந்த அந்த சபையில் தனது சீரிய கருத்துக்களால் பேசத் தொடங்கிய சில விநாடிகளில் அனைவரையும் தன்னை நோக்கி திரும்பிப் பார்க்க வைத்து சிலிர்க்க வைத்தவர். காரணம், அவர் கற்றது ஏராளம்! ஏராளம்!

அவர் அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபோது தமிழ் நாட்டில் கால் வைக்கும் முன் தன் தலையில் அவர் பாதத்தைப் பதித்து இறங்கி வரவேண்டும் என்று விரும்பி தலை வணங்கி நின்றவர் ராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி. அவர்தான் விவேகானந்தரின் அமெரிக்க பயணத்துக்கு பொருள் உதவி செய்தவர். அந்த அளவுக்கு அறிவாற்றல் மிக்கவராகத் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். அதற்குக் காரணம், அவரின் தொடர்ச்சியான வாசிப்பு பழக்கமே.

பிரிட்டனில் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு முறை ஒரு பேச்சைக் கேட்டாலோ அல்லது ஒரு புத்தகத்தைப் படித்தாலோ அப்படியே அதை அடிபிறழாமல் திரும்பச் சொல்லக்கூடிய வல்லமை மிக்கவர் என்று புகழப்படுவது உண்டு. அத்தகைய ஆற்றல் அவருக்கு

இருந்துள்ளது. அவர் நேரம் கிடைக்கும் போதெல்லாம் எதையாவது படித்துக் கொண்டே இருப்பாராம்.

தனது பேச்சாற்றலால் அதிகம் சம்பாதித்தவர். பேசுவதற்கு என்றே அமெரிக்கா சென்று பல கூட்டங்களில் பேசி அதன் மூலம் பெரும் பணம் சம்பாதித்தவர். அவர் ஒரு கூட்டத்தில் பேசிய கருத்துக்களை மறு கூட்டத்தில் பேச மாட்டாராம். அப்படியானால் எவ்வளவு படித்திருப்பார் பாருங்கள். அதனால்தான் வரலாற்றில் நீங்கா இடம்பிடித்து இன்றும் வாழ்கிறார்.

மகாத்மா காந்திக்கும் ஒரு சிறப்பு உண்டு. அவர் எழுதிய அளவுக்கு உலகில் வேறு எவரும் எழுதியதில்லை. அந்த அளவுக்கு படித்தவர் அவர். அதனால்தான் எழுத முடிந்தது.

இப்படி வாசிப்பை சுவாசமாகக் கருதி வாழ்ந்து வரலாறு படைத்தவர்கள் ஏராளம். அவர்களில் வாழ்க்கையில் வென்றவர்கள்தான் அதிகம். என்னிடம் பணம் இருந்தால் ஒரு நூலகத்தை அமைப்பேன் என்றவர் ஆபிரஹாம் லிங்கன். இதேபோல் மகாத்மா காந்தியும் கூறியுள்ளார்.

இவர்களைப்போல் இன்னும் பலர் உள்ளனர். எனவே, வாசிக்கும் பழக்கத்தை இளைஞர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் . அதுதான் உங்களுக்கு நிரந்தர நண்பனாக இருக்கும். நீங்கள் நினைத்ததைச் சாதிக்க முடியும். வாசிப்பைத் தொடருவோம்! வாழ்க்கையை வளமாக்குவோம்!

# நிந்தவூர் கடலரிப்பை தடுக்க 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு





(கே எ ஹமீட்)

நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லை பரப்பின் கடலரிப்பைத் தடுக்கும் நிரந்தர வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் முயற்சியில் 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் கரவலை மீன்பிடி சங்கத்தால் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுகொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் பைசால் காசிம், நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லையின்கடலரிப்பைதடுப்பதற்கான கரைக்குகுறுக்கால்கல்வீதியமைக்கும் நிரந்தரத் தீர்வுத்திட்டத்திற்கான மேற்பர்வைக்கான கள விஜயத்தை கடந்த திங்கட்கிழமை கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் பொறியியலாளர் உட்பட உரிய அதிகாரிகளும் மேற்கொண்டனர்.

இத்தடுப்பு திட்டமானது வடக்கு பகுதியில் , (நிந்தவூர் ரவாஹா பள்ளிவாயல் முன் கடல் எல்லை தொடக்கம் காரைதீவு வரையிலான பிரதேசம் வரைக்கும்) தடுப்பு சுவர் அமைக்கஉள்ளதாகவும்,எதிர்வரும்மே மாதம்நடுப்பகுதியில்தொடங்கவுள்ளதாக வாக்குறுதி அளித்ததோடு இதற்காக 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன், கிழக்கு கரையோரப் பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவ சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் .

கடந்த காலங்களில் சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான தடுப்பு சுவர் அமைக்கும் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமால் தெற்கு கடல்எல்லைபரப்பில்செய்துமுடித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஸுஹறதுல் அமீனுக்கு பாராட்டு

(பாறுக் ஷிஹான்)

கல்முனைக் கல்வி வலயத்தில் மிக நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச்செல்லும்விஞ்ஞானப்பாட ஆசிரியஆலோசகர்எம்.எஸ்.ஸுஹறதுல் அமீனை சேவை நலன் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு புதன்கிழமை கமு/கமு/இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம் றிசாத் தலைமையில் மிக சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில்ஓய்வுபெற்றுச்செல்லும் எம்.எஸ்.ஸுஹறதுல் அமீனின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுப்பரிசுமற்றும்நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.(05)

# வலிப்பு ஏற்பட்டு கிணற்றில் விழுந்த இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு

## யாழ்ப்பாணத்தில் பரிதாபம்

வலிப்பு ஏற்பட்ட நிலையில் கிணற்றில் விழுந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் புதன்கிழமை உயிரிழந்துள்ளார். இதன்போது மாதகல் - சகாயபுரம் பகுதியைச் சேர்ந்த பிரதீபன் நித்தியா (வயது 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த பெண்ணுக்கு வலிப்பு நோய் உள்ளது. இந்நிலையில் புதன்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் வீட்டு கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். பின்னர் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குகொண்டுசெல்லப்பட்டு,அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் வியாழக்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இரண்டு பிள்ளைகளின் தாயான இவர் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு உப அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# சிங்கள மொழி சான்றிதழ் திருக்கோவிலில் வழங்கல்









(விரி.சகாதேவராஜா)

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இளைஞர் யுவதிகளுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட சிங்கள மொழித் தொடர்பாடல் பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. எஸ். நிருபா தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாடநெறியின் வளவாளரான சுதேஷ் ருஷாந்தன் மற்றும் பாடநெறியை பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# மடத்தடி மீனாட்சி அம்மனின் பாற்குடபவனி நேற்று நடந்தது



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற தேசத்து ஆலயமாம் நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தபாற்குடபவனி நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது.

ஆலய மேற்கு வளாகத்திலுள்ள சிவன் ஆலயத்திலிருந்து நேற்று காலை 8 மணி பாற்குடபவனி ஆரம்பமாகி அம்மன் ஆலயத்தில் பால் சொரியும் நிகழ்வு இடம்பெறும்.

ஆலயத்தின் இரண்டாவது வருடாந்த அலங்கார உற்சவம் தினமும் பகல்பூஜையாக சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

மேற்படி உற்சவம் புதுவருடத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது .

உற்சவகால பிரதம குரு சிவாகமவித்யா பூஷணம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா சமுகத்தில் வருஷாபிஷேக கிரியைகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

தொடர்ச்சியாக ஒன்பது தினங்கள் பகல் அலங்கார உற்சவ திருவிழாக்கள் இடம் பெற்று எதிர்வரும் 23 ஆம் திககதி செவ்வாய்க்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# ராமன், ரஹ்மான் என்ற கருத்துக்கள் யாருடையதாவது மனதை புண்படுத்தியிருந்தால் மன்னிப்புக் கேட்கிறேன்

## உலமா கட்சி மற்றும் ஐக்கிய காங்கிரஸ் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி

(பாறுக் ஷிஹான்)

சில வருடங்களுக்கு முன் நான் உலமா கட்சித்தலைவர் என்ற வகையில் என்னால் கூறப்பட்ட ராமன், ரஹ்மான் என்ற கருத்துக்கள் என் மீது அபிமானமுள்ள சிலருக்கு மனவேதனை தருவதாக உள்ளது என என்னிடம் நேரடியாக சொல்லப்படுவதால் அக்கருத்துக்கள் எவரது மனதையாவது புண்படுத்தியிருந்தால் அதற்காக நான் பகிரங்க மன்னிப்பு கேட்கிறேன் என உலமா கட்சி மற்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் தெரிவித்துள்ளவை வருமாறு -

இஸ்லாமிய மதத்தை பொறுத்த வரை முதல் மனிதன் ஆதம் ஒரு முஸ்லிமாகவே வாழ்ந்தார் என்பதால் உலகில் உள்ள அனைத்து மதங்களை சேர்ந்தோரும் சகோதரர்களே ஆவர்.

இதனால்த்தான் ஆதிகால முஸ்லிம்களின் சிறிய கதைகள் பின்னாளில் பெரும் கற்பனை காவியங்களாக மாறியுள்ளன என்பதே எனது நம்பிக்கை. இந்த வகையில்தான் நான் மேற்படி கருத்துக்களை சொல்லியிருந்தேன்.

ஆனால் அர்ரஹ்மான் என்பது இறைவனின் திருப்பெயர்களில் ஒன்று என்பதால் அதனோடு ஒருவரை இணைப்பது இறைவனை அகௌரவப்படுத்துகிறது என நான் என்றும் மதிக்கும், வாழ்வில், தனது பதவியில் எப்போதும் நேர்மையை கடைப்பிடிக்கும் ஒருவர் எனக்கு வருத்தத்துடன் கூறியதால் என் கருத்து அவரது மனதை மிகவும் காயப்படுத்தியுள்ளது என்பது புரிகிறது.

மக்களை எமாற்றும், இனவாத, லஞ்சம் வாங்கும், மோசமான மனிதர்களின் உள்ளங்களை விட நல்லவர்கள் மனது நோகும் என்றால் அதனை தவிர்ப்பது நல்லது. அந்த வகையில் ரஹ்மானோடு ராமனை இணைத்து கருத்து சொன்னமைக்காக நல்லவர்களின் மனது வலிக்கிறது என்றால் அதற்காக நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

(05)

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சர்வ மத பண்டிகை நிகழ்வுகள் கோலாகலம்





(சியாத். எம். இஸ்மாயில், படம்: : கே. மாதவன்)

தமிழ்,சிங்களபுத்தாண்டுமற்றும் ரமழான் பண்டிகையையொட்டி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சர்வமத நல்லிணக்க விஷேட விருந்துபசார நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது.

சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் வைத்தியசாலை அலுவலகத்தில் கடமையாற்றுகின்ற மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விருந்து உபசார நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்தநிகழ்வில்வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் மற்றும் தர முகாமைத்துவ அலகின் பொறுப்பு வைத்தியர் டாக்டர் எம்.எச்.எம். சனூபர், திட்டமிடல் பொறுப்பு வைத்தியர் டாக்டர். எம்.எம். தாஸிம், தாதிய பரிபாலகர் பி.ரீ. நௌபர், கணக்காளர் பி. புனிதராஜ், நிருவாக உத்தியோகத்தர் கே. விஜயகுமார், பிரதம சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களான எஸ்.எல்.சாதீக், எம்.பி.எம்.சைபுல்லாஹ், அலுவலகஉத்தியோக்கத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டதுடன் பாரம்பரிய உணவு வகைகளை மூவினங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பரிமாறி மகிழ்ந்தனர். (05)

# மாரடைப்பால் கணவன் இறப்பு; பாசத்தால் மனைவியும் மறைவு

## நெடுங்கேணியில் சம்பவம்

நெடுங்கேணியில் மாரடைப்பு நோய் காரணமாக கணவன் இறந்ததும், கணவனின் இறப்பை தாங்க முடியாத மனைவி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியாவடக்கு,நெடுங்கேணி, 6 ஆம் கட்டை பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து அவர் அவசரமாக நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கிருந்து குறித்த நபரை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல தயாராகிய போது குறித்த குடும்பஸ்தரின் மனைவி வவுனியா வைத்தியசாலை செல்வதற்கான பொருள்களை எடுத்து வர வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதன்போது, நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டிருந்த குடும்பஸ்தர் மாரடைப்பு காரணமாக வைத்திய சாலையிலேயே மரணமடைந்துள்ளார். குறித்த தகவலை வீட்டிற்கு சென்றிருந்த அவரது மனைவிக்கு தெரியவந்ததையடுத்து,கணவனின் இறப்பை தாங்க முடியாது மனைவி தவறான முடிவெடுத்து வீ;டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச் சம்பவத்தில் 18 மற்றும் 15 வயதுடைய இரு பெண் பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய ராமச்சந்திரன் ரவீந்திரன் மற்றும் மனைவியான 49 வயதுடைய ராமச்சந்திரன் ஜோதீஸ்வரி ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவர். சம்பவம் தொடர்பில்நெடுங்கேணிபொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றார்கள்.(05 -100)

# பாலித தேவப்பெருமாளுக்கு வவுனியாவிலும் அஞ்சலி






மின்சாரம்தாக்கிமரணமடைந்த முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவப்பெருமாளுக்கு மூவின இளைஞர்களும் இணைந்து வவுனியாவில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

வவுனியா, கந்தசாமி கோவில் வீதியில் வியாழக்கிழமை இந் நிகழ்வு இடம்பெற்றது. கொவிட் பெருந்தொற்று காலத்திலும், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நேரத்தில் இன, மதங்களைக் கடந்து முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவப்பொருமாள் பணியாறி இருந்தார்.

இதனால் மக்கள் மனங்களில் அவர் சிறந்த அரசியல் வாதியாக இடம்பிடித்திருந்த நிலையில் மின்சாரம் தாக்கி மரணமடைந்திருந்தார். இந்நிலையில் வவுனியா இளைஞர்களும் அவரது படத்திற்கு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதில் தமிழ், சிங்கள், முஸ்லிம் இளைஞர்களும் கலந்து கொண்டனர். (05 - 100)

# மாவட்ட பல்லினங்களின் கலை இலக்கிய விழா





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவட்ட பல்லின கலை இலக்கிய விழா வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரால் தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது.

சிங்கள, தமிழ், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது.

கயிறுஇழுத்தல்,முட்டிஉடைத்தல்,தலையணைஅடி, கரண்டியில் தேசிக்காய் வைத்து நடத்தல், யானைக்கு கண் வைத்தல், தொப்பிகளை மாற்றுதல், பலூன் நடனம், பப்பாளி விதைகளை எண்ணுதல் உள்ளிட்ட பல போட்டிகள் நடத்தப்பட்டதுடன் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (05)

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிப்பதற்கான முன்னாய்வு கூட்டம்



(சர்ஜுன் லாபீர்)



2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் நாட்டில் நிலவிய மிகவும் கடினமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் பாதிப்புக்கு உள்ளான குறைந்தவருமானம்பெறும்குழுக்களின்ஊட்டச்சத்து மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவு வழங்கி அந்த மக்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக குறைந்த வருமானம் பெறும் சுமார் 2.74 மில்லியன் குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் நாட்டு அரிசியை இரண்டு (02) மாத காலத்திற்கு வழங்குவதற்கு அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டம் தேசிய ரீதியாக நாளை (ஞாயிற்றுக்கிழமை) ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் சுமார் 12000 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுவிடயமாககிராமமட்ட உத்தியோகத் தர்களுக்கான தெளிவுபடுத்தும் முன்னாய்வு கூட்டம் வியாழக்கிழமை சம்மாந்துறைபிரதேசசெயலாளர் எஸ்.எல்.எம் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் யூ.எல் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம்அஸ்லம், சமுர்த்தி முகாமையாளர், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,அரசி ஆலை உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



# கிளிநொச்சியில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி




கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு வருமுன் காப்போம் எனும் தொணி பொருளுக்கு அமைவாக வியாழக்கிழமை பொலிஸார் நிலையம் ஏற்பாடுசெய்த டெங்கு ஒழிப்பு சிரமதான பணிகள் மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களங்கள், வர்த்தசங்கம், பொது மக்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரிவு அனைவரையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட்டன.

கிளிநொச்சி நகராணா ஏ 9 வீதியின் இருமருங்கும் உள்ள இடங்களை கினிநொச்சிபொலிஸ்நிலையத்திலிருந்து ஆரம்பமாகிய சிறமதான பணிகள் கரடிப்போக்கு சந்தி, வைத்தியசாலை வரை டெங்கு ஒழிப்பு சிரமதான

# புலிகளது பொருளாதார நிலை கடத்தலுடன் தொடர்பானதாம்




(பாறுக் ஷிஹான்)

விடுதலைப்புலிகளது பொருளாதார நிலை கடத்தலுடன் தொடர்பானது. அதற்கு நாம் அனுமதிக்க முடியாது. இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டால் விடுதலைப்புலிகள் என்றஅமைப்புஒன்றுதேவையில்லை. முஸ்லீம்கள் மத்தியில் கூட தீவிரவாதம் தேவையில்லை. எதிர்காலத்தில் இந்நாட்டில் உள்ள சிங்கள மக்களு டன் சம வாய்ப்புக்களை தமிழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்குவதன் ஊடாக இந்நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியும்என்பதே எமது கருத்தாகும் என உலமா கட்சி மற்றும் ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

எதிர்கால தேர்தல் விடயம் குறித்து விசேட செய்தியாளர் சந்திப்பு ஒன்றை தனது அலுவலகத்தில் நடத்திய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு -

தேர்தல் என்ற ஒன்று வருகின்ற போது காலாகாலம் பூச்சாண்டி அரசியல் கண்டு வருகின்றோம்.விடுதலைப் புலிகளை உயிர்ப்பிக்கப்போகின்றோம் என்ற ரீதியில் தமிழரசுக்கட்சியினர் பேசுவார்கள். முஸ்லீம் மக்களை விடுத லைப்புலிகள் வந்து கொன்று இருக்கின்றார்கள் என முஸ்லீம் காங்கிரஸ் மக்களை உசுப்பேத்து வார்கள். இந்த நாள்களில் விடுதலைப் புலிகள் மீண்டும் உயிர்ப்பிப்பார்கள் என்று இதுவரை நினைக்கவில்லை.

ஆனால்தமிழ்மக்களதும்முஸ்லீம் மக்களுக்குமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் உறுதியாக இருக்கின்றோம். இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.அவ்வாறு வழங்கப்பட்டால் விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு ஒன்று தேவை யில்லை.முஸ்லீம்கள் மத்தியில் கூட தீவிரவாதம் தேவையில்லை .எதிர்காலத்தில் இந்நாட்டில் உள்ள சிங்களமக்களுடன்சம வாய்ப்புக்களைதமிழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்குவதன் ஊடாக இந்நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியும்என்பதேஎமது கருத்தாகும்.

விடுதலைப் புலிகள்ஆட்கடத்தலில் ஈடுபட்டுள்ளார்களா என்பது குறித்து எமக்கு தெரியாது .அதனை தமிழ் தரப்பினர் தான் கூற வேண்டும்.ஆனால் ஆட்கடத்தல் தொடர்பான குற்றச்சாட் டுக்கள் அவர்களுக்கு எதிராக முன் வைக்கப்பட்டிருந்தமை உண்மை. சிறுவர்களைக் கடத்தினார்கள் என்றும் கூட குற்றச்சாட்டுக்கள் இருந்தன. கடந்த யுத்த காலங்களில் கடத்தல் என்பது பல தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தடி எடுத்தவர்கள்எல்லாம்சண்டைக்காரன் போன்று விடுதலைப்புலிகள் மட்டுமல்ல ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்களும் அக்கால கட்டங்களில் செயற்பட்டிருந்தன.இவ்விடயங்கள் தெளிவாக ஆராயப்பட வேண்டும்.

யுத்தம் என்பது பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது உண்மை.விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஓர்; அமைப்பாக இருந்த காரணத்தால் நேரடி ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபடாது இரகசியமான பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம்.இவ்விடயங்கள் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களது கருத்துக்களில் இருந்து பெற முடியும்.அதை பற்றி இப்போது பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

காரணம் விடுதலைப் புலிகளின் கதை முடிந்து விட்டது.தற்போது நாட்டின் பொருளாதார நிலைமை என்பது இன்னும் சீரற்றதாகவே உள்ளது.விடுதலைப் புலிகளது பொருளாதார நிலை கடத்தலுடன் தொடர்பானது. அதற்கு நாம் அனுமதிக்க முடியாது. 1983 ஆண்டு தமிழ் மக்களின் பொருளாதாரம் சிதைக்கப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் சிறந்த தமிழ் வியாபாரிகள் கூட நாட்டை விட்டு வெளியேறிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.இதனால் பொருளாதாரம் அதல பாதாளத்தினுள் விழுந்தது. இந்த நாடு பொருளாதாரத்தில் வளம் பெற வேண்டும் என்றால் முதலில் இனவாத சிந்தனை ஒழிக்கப்பட வேண்டும். - என்றார்.(05)

# சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக எம்.பி.எம். ஹுசைன் புதிதாக நியமனம்





(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறைபிரதேசசெயலகத்தின்புதியசமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளராக ஒலுவிலைச் சேர்ந்த எம்.பி.எம்.ஹுசைன் வியாழக்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா,உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில்,சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவர் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் கடமையாற்றி தற்போது தலைமைப்பீட முகாமையாளராக பதவியு யர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# அன்னை பூபதியின் நினைவு நாள் தமிழ் அரசுக் கட்சி பணிமனையில்



(ஹஸ்பர் ஏ.எச் )

கணபதிப்பிள்ளை அன்னை பூபதி அம்மா அவர்களது 36 ஆவது நினைவு நாள் நேற்று (வெள்ளிக்கிழமை) இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருக்கோணமலை மாவட்டப் பணிமனையில் மாவட்டத் தலைவர் சண்முகம் குகதாசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர் கலந்து கொண்டு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு நகரின் மாமாங்க ஈஸ்வரர் ஆலயம் முன்பாக மார்ச் 19. 1988 உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட அன்னை 1988 ஏப்ரல் 19 இல் உயிர் திறந்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி செயற்பாட்டாளராக செயற்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. (05)

# அன்னை பூபதியின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள்

## தமிழர் தாயகம் எங்கும் உணர்வுபூர்வம்







கணபதிப்பிள்ளை அன்னை பூபதியின் 36 ஆவது நினைவுநாள் நிகழ்வானது நாட்டின் பல்வேறு இடங்களில் உணர்வு பூர்வமாக நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் தமிழர் தாயாக பகுதிகளான கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மேலும் பல பகுதிகளில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிலையில், கிழக்கு பல்கைக்கழக மாணவர்களாலும் நேற்று அன்னை பூபதியின் நினைவாக தாக சாந்தி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நினைவேந்தல்

கிளிநொச்சியில் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வானது சேவை சந்தை முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இந்தநினைவேந்தலில்நாடாளுமன்றஉறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டார்.

அத்தோடு கிளிநொச்சியில் இடம்பெற்ற நினைவேந்தலில் கலந்து கொண்டோர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்ததுடன் அடையாள உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

# புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜித் சுய கற்றல் பகுதி உருவாக்கம்

(சியாஜ்)

புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் காலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 'தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதி' புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

புத்தளம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் பல்வேறு முன்மாதிரியான செயற்பாடுகள் தொடராக நடைபெற்று வருகின்றமை வழக்கம்.

அதில் இம்முறை மாணவர்களின் சுய கற்றலை மேம்படுத்தும் வகையில் 'தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதி' என்ற பெயரில் மாணவர்களுக்கான கற்றல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் தாருஸ்ஸலாம் மஸ்ஜிதின் சுய கற்றல் பகுதி செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

தற்போதைய காலப்பகுதியில் வீட்டில் அமைதியான சூழலில் மாணவர்கள் கற்பது பாரிய சவாலாக உருவெடுத்துள்ளநிலையில்ஒவ்வொரு மஸ்ஜிதும் மாணவர்களுக்கென சுய கற்றலுக்கு ஒரு பகுதி ஒதுக்கப்பட வேண்டும் என்ற காலத்தின் தேவையை கருதி முன்மாதிரியாக தாருஸ்ஸலாம் மஸ்ஜிதில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாருஸ்ஸலாம் சுய கற்றல் பகுதியிலே விரும்பிய மாணவர்கள் வருகைதந்துசுயகற்றலில்ஈடுபடலாம்.

இதற்கு மேலதிகமாக பாடப்பகுதிகளில் விளக்கம் தேவைப்படும் பொழுது பிரதேச வாசிகளின் துறை சார்ந்தவர்கள் மூலம் அது விளக்கமளிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)

# கல்முனை என்பது தமிழர்களின் தாயகம் கல்முனையில் கோடீஸ்வரன் எச்சரிக்கை



(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை என்பது தமிழர்களின் தாயகம், தமிழர்களின் அடையாளம் அதனை யாரும் மறந்துவிட முடியாது .நீங்கள் மறக்கவும் கூடாது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் நற்பிட்டிமுனையில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

கல்முனையில் எமது நிலத்தை இழந்தால் எமது அடையாளமே போய்விடும். யாருக்காகவும் அதனை விட்டுக்கொடுக்ககூடாது. பறிகொடுத்தால் அடையாளம் பறிபோய்விடும்.

நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கான சீருடை வெளியிட்டுநிகழ்வுகடந்தபுதன்கிழமை விளையாட்டு கழகத் தலைவர் ஐ .கமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார் .

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

பிரதேச செயலகம் என்பது தமிழர்களின் அடிப்படை உரிமையாக இருக்கிறது.

இருந்தன. கல்முனைகுடிஎன்றுஅன்று இருந்தது. இன்று கல்முனையாக மாறி இருக்கின்றது. இவையெல்லாம் எமக்கெதிரான திட்டமிட்ட சூழ்ச்சிகள். சதி நடக்கிறது.

உண்மையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக முதன் முதலாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவன் நான்தான் . ஐக்கிய நாடு சபையின் 51 ஆவது கூட்டத் தொடரிலே பிரச்சினையை முன்வைத்தவனும் நானே. இதை யாரும் மறுக்க முடியாது.

வெகு விரைவில் இது விடயம் தொடர்பாக ஜனாதிபதியோடும் பிரதமரோடும் நாங்கள் தொடர்பு பட்டு பேச இருக்கின்றோம்.

நிபந்தனையோடு எமது ஆதரவை வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எமது பிரதேச செயலகத்துக்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்க வேண்டுமோ அவற்றை யெல்லாம் தர வேண்டும் என்று நாங்கள் நிபந்தனை விதிக்க இருக்கின்றோம். அது மாத்திரமல்ல ஏலவே ஆளணியின் படி கணக்காளர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.ஆனால் அவர் வரவில்லை.



எமது அடையாளத்தைப் பாதுகாப்பதில் இடம் முக்கியமானது.

எமக்கான அடையாளம் இருக்க வேண்டுமாக இருந்தால் எமது இடம் பறிபோகக் கூடாது.

இதைவிட்டால்நாளைகல்முனைல் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற அடையாளமேஇல்லாமல்போய்விடும்.

ஒரு 30, 40 வருடங்களுக்கு முன் தள்ளிப் பார்ப்போமானால் பிரதேசம் எல்லாம் தமிழர்களின் பிரதேசமாக திட்டமிட்ட சதி நடக்கின்றது. அதனால் அது இழுபடுகின்றது.

அந்தசூழ்ச்சிகளைஎல்லாம்நாங்கள் ஒன்றாகி முறியடிக்க வேண்டும். அதற்காக உங்களது ஒத்துழைப்பும் தேவை.- என்றார்.

சீருடை விநியோக நிகழ்வில் அக்கரைப்பற்று பிரபல தொழிலதிபர் குமார் ஜெகநாதன் மற்றும் ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு



(சியாஜ்)

புத்தளம் மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே முக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கான 'மக்கள் மேடை'நிகழ்வுவியாழக்கிழமை காலை புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் 'தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்' என்ற கருப்பொருளை மையப்படுத்திய மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.





மார்ச் 12 இயக்கத்தின் புத்தளம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முஹம்மது ருமைஸ் தலைமையில், தேர்தல் வன்முறைகளை கண் காணிக்கும் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மஞ்சுள கஜனாயக்கவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்ன, நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் செயலாளர் முஹம்மது நௌபல், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழு உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் பிரியங்கரவின் புத்தளம் தொகுதி இணைப்பாளர், சமய தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அரசியல் பிரமுகர்களின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பானகருத்துரைகளைத் தொடர்ந்து பொதுமக்களின் கேள்விகள் நேரடியாக அரசியல் பிரமுகர்களிடம் முன்வைக்கப்பட்டு கேள்விகளுக்கான பதில்கள் வழிகாட்டிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

## நூல் வெளியீடு

இலங்கையின் கட்டமைப்பானஇனவழிப்பும்தமிழ் மக்களின் இன சுத்திகரிப்பும் நூல் வெளியீடு தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சியினூடாக இன்று (சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு இல.232, கோவில் வீதி நல்லூரில் அமைந்துள்ள தமிழ் மக்கள் கூட்டணி காரியாலயத்தில் வெளியிடப்படவுள்ளது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2024இல் வெளியிடப்பெற்றது